# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2018/3 - 2017 මැයි මස 08 වැනි සඳුදා - 2017.05.08

*2018/3 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 3/2013*

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க,வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 ஆம், 321 ஆம் பிரிவுகளினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு துறைமுக மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*அர்ஜுன ரணதுங்க,*
*துறைமுக மற்றும் கப்பற்றொழில் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2017, மே 08.*

ஒங்குவிதிகள்

*2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதிய 1987/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-*

1. *அவற்றின் 6 (அ) என்னும் ஒழுங்குவிதியில், "சமவாயத்தின் அத்தியாயங்கள் II, III, V/1-1 மற்றும் V/1-2 இன் ஏற்பாடுகளுக்கிணங்க தேர்ச்சிகள் பற்றிய சான்றிதழ்களைப்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சமவாயத்தின் அத்தியாயங்கள் II, III, V/1-1 மற்றும் V/1-2 இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தேர்ச்சிகள் பற்றிய சான்றிதழ்களையும் சமவாயத்தின் அடிப்படைப் பயிற்சியிலான தேர்ச்சிச் சான்றிதழையும் (பட்டியல் அ- VI/I. எஸ்ரீசிடபிள்யூ கோவை)" ;*

2. *அவற்றின் 19 ஆம் ஒழுங்குவிதியில், (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-*

   *"(1) ஏதேனும் குறிப்பிட்ட தகுதிச் சான்றிதழுக்காக அலுவலர்களுக்குக் குறித்துரைக்கப்பட்ட தகைமையளிக்கும் கடல் செல் சேவை, தகுதியை மதிப்பிட ஆரம்பிக்கும் திகதிக்கு நேர்முந்திய 10 ஆண்டுக்காலப்பகுதியினுள் புரியப்படுதல் வேண்டுமென்பதுடன், தகுதி மதிப்பீடு ஆரம்பித்த திகதிக்கு நேர்முந்திய 5 ஆண்டுகளினுள் 12 மாதக் கடற்சேவைக்காலப்பகுதியை உள்ளடக்குதலும் வேண்டும் ." ;*

3. *அவற்றின் 25 ஆம் ஒழுங்குவிதியில், (4) ஆம் பந்தியை நீக்குவதன் மூலமும் ;*

4. அவற்றின் 28 ஆம் ஒழுங்குவிதியில், (2) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் :-

"(2) கப்பலின் தொழிற்பாட்டில் பெயர்குறிக்கப்பட்ட பாதுகாப்பு அல்லது தீழ்ப்புத் தடுப்புக் கடமைகளைப் புரியவென கப்பலின் நிரப்புகோணத்தின் பாகமாகக் கப்பலின் அலுவல்களை நடாத்துவதற்கு ஏதேனும் தன்மையில் கப்பலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது ஈடுபடுத்தப்பட்டுள்ள கடலோடிகள், தனிப்பட்ட உயிர்க்காப்புநுட்பங்கள் (எஸ்ரீசிடபிள்யூ கோவையின் பட்டியல் ஏ - VI/1-1), தீ தடுப்பு, எதிர்ப்பு (எஸ்ரீசிடபிள்யூ கோவையின் பட்டியல் ஏ - VI/1-2), ஆரம்ப முதலுதவி (எஸ்ரீசிடபிள்யூ கோவையின் பட்டியல் ஏ - VI/1-3), தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புக்கள் ஆரம்ப முதலுதவி (எஸ்ரீசிடபிள்யூ கோவையின் பட்டியல் ஏ - VI/1-4), இல் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி பெறுதல் வேண்டும்."

5. அவற்றின் 29 (5) ஆம் ஒழுங்குவிதியில் "அதன் கொடியைப் பறக்கவிடுவதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

6. அவற்றின் 29 (6) ஆம் ஒழுங்குவிதியில் "இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எஸ்ரீசிடபிள்யூ சமவாயத்தின் ஒழுங்குவிதி 1/10 இன் ஏற்பாடுகளின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

5- 659